மனையக மாசுபாட்டிற்கு (1) சமையல் செய்தல் (2) சமயச் சடங்குகள் (3) மனையகப் பொருட்கள் மற்றும் வேதிப்பொருட்களின் பயன்பாடு மற்றும் (4) புகைப்பழக்கம் போன்றவையே முக்கிய மூலங்களாக, அமைகின்றன. இம்மூலங்களிலிருந்து வெளிவரும் காற்று மாசுக்களைப் பற்றியும் அவற்றால் ஏற்படும் தீங்குகளைப் பற்றியும் இனி வரும் பகுதிகளில் விரிவாகக் காண்போம்.

### சமையல் செய்தல்

அன்றாட வாழ்வில் உணவுப் பொருட்களை நாம் சமைத்து சாப்பிடுகிறோம். சமைக்க பயன்படுத்தும் எரிபொருட்களின் அளவானது நாட்டிலுள்ள மக்களின் எண்ணிக்கைக்கு நேர் விகிதத்திலுள்ளது.

அதாவது மக்கள் தொகை அதிகமானால் எரிபொருள் பயன்பாடும் அதிகரிக்கிறது. நம் நாட்டின் மக்கள் தொகை நூறு கோடியைத் தாண்டி விட்டதும், நமது நாடு மக்கள் தொகை எண்ணிக்கையில் உலக அளவில் ,இரண்டாவது இடத்தில் இருப்பதும் நாம் அறிந்ததே. ஆகையால், நம் நாட்டில் சமையல் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் எரி பொருட்களின் அளவுகள் மிகவும் அதிகமாகும். இவையே மனையக மாசுக்களின் முக்கிய மூலங்களாகும்.

பெரும்பாலும் ஒரு குடும்பத்தின் வருமானமே அக்குடும்பத்தில் சமைக்கப் பயன்படுத்தப்படும் எரிபொருட்களை நிர்ணயிக்கிறது எனலாம். எடுத்துக்காட்டாக, குறைந்த வருமானமுள்ள குடும்பங்களில் உலர்ந்த சாணம், வேளாண்மைக் கழிவுகள் உள்ளிட்ட உயிர்க்கூளக் கழிவுகள் (Biomass residues) மற்றும் விறகு போன்ற எரிபொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. மத்திய மற்றும் உயர் வருமானமுள்ள குடும்பங்களில் மண்ணெண்ணெய், திரவப் பெட்ரோலிய வாயு (LPG) போன்ற எரிபொருட்கள் பெரும்பாலும் உபயோகத்தில் உள்ளன.

நம் இந்தியக் கிராமங்களில் வாழ்வோரில் பெரும்பாண்மையானோர் குறைந்த வருமானமுள்ளவர்களே. எனவே, கிராமப்புறங்களிலுள்ள எழுபது சதவீத வீடுகளில் உயிர்க்கூள பொருட்களும், அவற்றின் கழிவுகளும் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுவதாக ஆற்றல் பயன்பாட்டுப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. நகரங்களில் வாழும் குறைந்த வருமானமுள்ளவர்களும் இந்த

எரிபொருட்களையே பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பொருட்களை எரிக்கும்போது அபாயகரமான காற்று மாசுக்கள் வெளிவருவதால் வளர்முக நாடுகளில் குறைந்த வருவாய்ப் பிரிவினரே மனையகக் காற்று மாசுக்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

சமையலறையில் காற்றோட்ட வசதியின்மை போன்றவையும் மனையகத்தில் காற்று மாசுக்களின் செறிவை அதிகரிக்கும் காரணிகளாகும். மேற்கூறிய காரணிகளால் நமது கிராமப்புறங்களில் உள்ள வீடுகளில் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவுகளை விட சுமார் ஐந்து மடங்கு அதிகச் செறிவுடன்

**அன்றாடம் பயன்படுத்தும் சில எரிபொருட்களும் அவற்றை எரிப்பதால் வெளிவரும் காற்று மாசுக்களும்:**

| எண் | எரிபொருள் | காற்றுமாசுக்கள் |
|---|---|---|
| 1. | சாணம் | கார்பன் மோனாக்ஸைடு, தூசித்துகள்கள், ஹைட்ரோ கார்பன்கள் |
| 2. | வேளாண்மைக் கழிவுப் பொருட்கள் | கார்பன் மோனாக்ஸைடு, தூசித்துகள்கள், ஹைட்ரோ கார்பன்கள் |
| 3. | விறகு | கார்பன் மோனாக்ஸைடு, தூசித்துகள்கள், கந்தக டை ஆக்ஸைடு |
| 4. | மரக்கரி | கார்பன் மோனாக்ஸைடு, தூசித்துகள்கள், கந்தக டை ஆக்ஸைடு |
| 5. | மண்ணெண்ணெய் | கார்பன் மோனாக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு, கந்தக டை ஆக்ஸைடு |
| 6. | திரவப் பெட்ரோலிய வாயு | நைட்ரஜன் ஆக்ஸைடுகள் கந்தக டை ஆக்ஸைடு |

மனையகத்தில் பயன்படுத்தப்படும் எரிபொருட்களின் வேதித்தன்மை மற்றும் பயன்பாட்டு அளவிற்கேற்ப வெளிவிடப்படும் காற்று மாசுக்களின் வேதித் தன்மையும், செறிவும் மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, உயிர்க்கூள எரிபொருளிலுள்ள ஆவியாகும் பொருட்கள், சாம்பல் மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றின் அளவுகளும் எரிக்கப்பயன்படுத்தப்படும் உயிர்க்கூளப் பொருட்களின் அளவுகளுமே மனையகத்தில் வெளிவிடப்படும் காற்று மாசுக்களின் வேதித்தன்மைகளையும் அவற்றின் செறிவுகளையும் நிர்ணயிப்பதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மனையகத்தில் பயன்படுத்தப்படும் அடுப்பும், வெளியேறும் காற்று மாசுக்களின் அளவை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. எடுத்துக் காட்டாக, திரி பயன்படுத்தப்படும் மண்ணெண்ணெய் அடுப்புகளிலிருந்து அழுத்தத்தினால் இயங்கும் மண்ணெண்ணெய் அடுப்புகளைவிட அதிக அளவு கார்பன் மோனாக்ஸைடு வாயு வெளிவருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், தேவைக்கதிகமான எரிபொருட்களைப் பயன்படுத்துதல், குறுகிய மற்றும் புகைபோக்கி வசதியில்லாத சமையலறை, மாசுக்கள் உள்ளதாகச் சூழல் இயக்கங்களின் தகவலறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதனால் சில சமயங்களில் வாகன மற்றும் தொழிற்சாலை மாசுபாட்டைக் காட்டிலும் மனையகக் காற்று மாசுபாடானது நமக்குப் பெரும் தீங்குகளை ஏற்படுத்தி விடுகிறது.

சமையல் செய்கையில் வெளிவரும் காற்று மாசுக்களினால் நுகர்வோர் கண் எரிச்சல், கண் வலி, தொண்டைக் கமறல், தலைவலி, சுவாசிப்பதில் சிரமம் போன்ற தற்காலிக இன்னலுக்குள்ளாகின்றனர்.







நுகர்வோரில் குழந்தைகளும் பெண்களும் மற்றும் வயதானவர்களும்தான் பெருமளவில் பாதிப்பிற்குள்ளாவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவர்கள் மனையகங்களில் அதிகநேரம் இருப்பதும், காற்று மாசுக்கள் எளிதில் இவர்களைத் தாக்குவதுமே இதன் முக்கியக் காரணங்களாகும். மேலும், இம்மனையக மாசுக்களால் இவர்கள் சுவாசக் கோளாறுகள், ஆஸ்துமா மற்றும் புற்றுநோய் போன்ற கொடிய ஆட்கொல்லி நோய்களுக்கும் இரையாகின்றனர். மனையக மாசுபாட்டால் விளையும் நோய்களை கருத்தில் கொண்டு நாம் புகை குறைந்த அடுப்பு, சூரிய அடுப்பு உள்ளிட்ட சூழலுக்குத் தகுந்த சமையல் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இவற்றைப் பயன்படுத்துவதால் தேக சுகமும், தேச வளமும் பாதுகாக்கப்படும்.



## சமயச் சடங்குகள்

நம் நாட்டு மக்களில் பெரும்பாலானோர் இறை நம்பிக்கை உள்ளவர்கள் என்பது நாம் அறிந்ததே. அனைத்து சமயங்களிலும் தீப வழிபாடு அல்லது ஒளி வழிபாடு செய்து இறைவனை வழிபடுவதை வழக்கமாக உள்ளது. இந்துக்கள் ஊதுபத்தி, சாம்பிராணி கொளுத்தியும், எண்ணெய் விளக்குகள் ஏற்றியும் இறை வழிபாடு செய்கிறார்கள். மேற்கண்டவற்றைத் தவிர ஓமகுண்டம் வளர்த்தல், யாகம் வளர்த்தல் போன்ற சமயச்சடங்குகளும் ஆங்காங்கே நடத்தப்படுகின்றன. கிறிஸ்தவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றியும் முஸ்லீம்கள் தர்ஹாக்களில் ஊதுபத்தி கொளுத்தியும், தங்கள் இல்லங்களில் இறந்தோர் நினைவாகச் சாம்பிராணி இட்டும் சமயச்சடங்குகளை நிறைவேற்றுகிறார்கள். இதனால், கோவில்கள், ஆலயங்கள் மற்றும் தர்ஹாக்களில் இறைவழிபாடு உள்ளிட்ட சமயச்சடங்குகளின்போது காற்று மாசுக்கள் வெளிவிடப்படுகின்றன. நம் நாட்டிலுள்ள வீடுகளில் பூஜை அறையும், அதில் தினந்தோறும் இறைவழிபாடும் நடைபெறுகிறது. திருவிழா நாட்களிலும், சமயம் சார்ந்த முக்கிய நாட்களிலும் வீடுகளில் சிறப்பு தீப வழிபாடு செய்வதும் பட்டாசு கொளுத்தி மகிழ்வதும் வழக்கமாக உள்ளன. இதனால் மனையகக் காற்றில் மாசுக்களின் செறிவு சாதாரண நாட்களில் உள்ளதை விட அதிகரிக்கும் வாய்ப்புகளுள்ளது. சமயச்சடங்குகள் தேவைதான். எனினும், காற்றை மாசுபடுத்தும் சடங்குகளைக் குறைப்பதும், தவிர்ப்பதும் அவற்றால் நமக்கு ஏற்படும் பல நோய்களிலிருந்து நம்மைக் காக்க உதவும். இதுவே இறைவனின் விருப்பமாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## மனையப் பொருட்கள் மற்றும் வேதிப்பொருட்கள்

வீட்டு கட்டுமானப் பொருட்கள், அன்றாட நடைமுறைச் செயல்களுக்காக நம்வாழ்வில் பயன்படுத்தப் படும் பொருட்கள், அலுவலகங்களில் பயன்படும் சாதனங்கள், தனி மனித மற்றும் வீட்டு பராமரிப்பு வேதிப்பொருட்கள் ஆகியவற்றிலிருந்து அநேக காற்று மாசுக்கள் வெவ்வேறு செறிவுகளில் வெளிவருகின்றன. இக்காற்று மாசுக்கள் சில மனித உடல் நலனுக்குப் பெரும் கேடுகளை விளைவிப்பதாகவும், மற்றவை குறைந்தளவில் பாதிப்புகளை ஏற்படுத்துவதாகவும் மருத்துவ வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்டுமானப் பொருட்களில் ஆஸ்பெஸ்ட்டாஸ் (Asbestos), கிரானைட் (Granite) ,மற்றும் சுண்ணாம்புக்கல் (Lime Stone) ஆகியவை மனையகக் காற்று மாசுக்களின் மூலங்களாகும். ஆஸ்பெஸ்டாஸ் தடுப்புகள் மற்றும் கூரைகளிலிருந்து ஆஸ்பெஸ்டாஸ் துகள்கள் வெளிவருகின்றன. இத்துகள்களைச் சுவாசிப்பதால் ஆஸ்பெஸ்டியாஸிஸ் (Asbestosis) என்ற நோய் ஏற்படுகிறது. ரேடியம் என்ற கதிரியக்கத் தனிமம் கிரானைட் மற்றும் சுண்ணாம்புக் கற்களிலும் மற்றும் யுரேனியத் தாதுக்களிலும் உள்ளது. இக்கதிரியக்கத் தனிமம் கதிரியக்கச் சிதைவின்போது ரேடான் என்ற கதிரியக்க வாயுவை வெளிவிடுகிறது. ரேடானின் அரை ஆயுட்காலம் 3.8 நாட்களேயாகும். எனினும், இந்த வாயு தொடர்ச்சியான கதிரியக்கச் சிதைவின் மூலம் கதிரியக்கச்சேய் தனிமங்களை உருவாக்கி விடுகிறது. இச்சேய் தனிமங்களிலிருந்து ஆல்பாத் துகள்கள் வெளிவருகின்றன. இவை மின்னேற்றத் துகள்களானதால் மனையகக் காற்றிலுள்ள திட மற்றும் திரவத் துகள்களுடன் இணைந்து கதிரியக்க மிதவைத் துகள்களாக மாறுகின்றன. சில பகுதிகளில், வீடு அமைந்துள்ள இடத்திலுள்ள நீர் மற்றும் மண் போன்றவையும் ரேடான் வாயுவை வெளிவிடுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அன்றாட வாழ்வில் நடைமுறைத் தேவை மற்றும் செயல்களுக்காகப் பயன்படுத்தப்படும் பொருட்களான துணிமணிகள், தரை விரிப்புகள், படுக்கை விரிப்புகள், செயற்கைக் கம்பளங்கள், பிளாஸ்டிக் பொருட்கள், மரச் சாமான்கள், அறைத் தடுப்புகள் (Room Dividers) போன்றவை காற்று மாசுக்களை வெளிவிடும் குறிப்பிடத் தக்க மூலங்களாகும். உலர் சலவை செய்யப்பட்ட துணிமணிகள், தரை விரிப்புகள், படுக்கைவிரிப்புகள், கதவு மற்றும் ஜன்னல் திரைகள் ஆகியவற்றிலிருந்து டிரை குளோரோ எத்திலீன் வெளிவருகிறது. செயற்கைக் கம்பளங்கள் மற்றும் சில வகையான தரை விரிப்புகளிலிருந்து நுண் இழைகளும், சிறு நார்களும் வெளிவருகின்றன. மரச்சாமானகள், நார்ப்பலகை, ஒட்டுப்பொருட்கள் மற்றும் சில பிளாஸ்டிக் பொருட்களில் ஒட்டுக் காரணியாக பார்மால்டிஹைடு பயன்படுத்தப் படுவதால் இவ்வேதிப் பொருளும் அவற்றிலிருந்து வெளிவருகிறது. வீடுகள், மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகங்கள் ஆகியவற்றி லுள்ள மருந்து மற்றும் வேதிப் பொருட்களும் சிறிதளவு காற்று மாசுக்களை வெளிவிடுகின்றன.



புகைப்படம் கழுவும் கருவிகள் (Photographic Equipment) மற்றும் நகலி (Photocopying machine) போன்றவை அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் சாதனங்கள் என்பது நாம் அறிந்ததே. இவற்றில் புகைப்படம் கழுவும் கருவியிலிருந்து அசிட்டிக் அமிலத்துளிகளும், நகலியிலிருந்து ஓசோன், கார்பன் துகள்கள், ஆவி நிலையிலுள்ள சில கரிமச்சேர்மங்கள் போன்றவையும் வெளிவருகின்றன.

சிகைத் தெளிப்புகள் (Hair sprays), நாற்ற மகற்றிகள் (Deodarants) காற்றுத் தூய்மை யாக்கிகள் (Air freshners) போன்றவை தனி மனிதப் பராமரிப்பிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இவையனைத்தும் வேதிப் பொருட்களாகையால் இவற்றின் பயன்பாட்டின் போது காற்று மாசுக்கள் மனையகக் காற்றில் கலக்கின்றன. மேற்பூச்சுகள் (Varnish), வர்ணங்கள் (Paints), ஒப்டுப்பொருட்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் போன்றவை வீட்டு மற்றும் அலுவலகப் பராமரிப்பிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. மேற்பூச்சுகள் மற்றம் வர்ணங்களை பயன்படுத்தும் போது டொலுவீன், சைலீன் மற்றம் பாதரசம் ஆகியவை வெளிவருகின்றன. ஒட்டுப் பொருட்களைப் பயன்படுத்தும்போது பார்மால்டிஹைடு வெளிவிடப்படுகிறது.



பூச்சிக்கொல்லிகள் பொதுவாக கரிம மற்றும் கனிம பூச்சிக்கொல்லிகள் என இருவகைப்படுத்தப்படுகின்றன. எறும்பு, கொசு, கரப்பான், மூட்டைப்பூச்சிகள் மற்றம் தீங்கு தரும் பிற பூச்சிகள் போன்றவற்றை விரட்டவும் அழிக்கவும் மனையகங்களில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான பூச்சிக்கொல்லிகள் கரிமப் பூச்சிக் கொல்லிகளாகும். நாப்தலீன் (Naphthalene) பேரா டைக் குளோரோ பென்சீன் (Para Dichloro Benzene), போரிக் அமிலம்போன்றவை பூச்சிக் கொல்லிக்கும், சோடியம் அல்லது கால்சியம் ஹைபோ குளோரைட், எத்தனால், ஐசோ புரோப்பனால் மற்றும் கிளைக்கோலிக் அமிலம் போன்றவை நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கும் (Microbial Pesticide) எடுத்துக் காட்டுகளாகும். இவற்றைப் பயன்படுத்துவதால் அநேகக் காற்று மாசுக்கள் வெவ்வேறுச் செறிவுகளில் வெளி வருகின்றன. எனினும், இக்காற்று மாசுக்களில் மனித உடல்நலத்திற்குக் கேடு விளைவிக்கக்கூடிய குளோரினேற்றமடைந்த ஹைடிரோ கார்பன்களே அதிகச் செறிவுகளுடன் வெளிவருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மனையகக் காற்றை மாசுபடுத்தும் பொருட்களை தவிர்த்து வாழ்வதே நாமும் நமது குடும்பமும் நலமுடன் வாழச் சிறந்த வழியாகும்.

## புகைபிடித்தல்

மனையக மாசுபாட்டின் மற்றுமொரு முக்கியக் காரணமான புகை பழக்கம் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஒருங்கே தீங்கு விளைவிக்கப் கூடியதாகும். புகைப்பதால் மிக நுண்ணிய துகள்கள் (Respirable Particles) நிகோடின், நைட்ரோசமைன்கள். பல்வளைய (Polycyclic) அரோமேட்டிக் ஹைடிரோகார்பன்கள். கார்பன் மோனாக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடுகள், கார்பன் டை ஆக்ஸைடு, பென்ஸ்பைரின் சயனைடு ஃபார்மால்டிஹைடு மற்றும் அக்ரோலின் உள்ளிட்ட சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட நச்சுப்பொருட்கள் வெளிவிடப்படுகின்றன.





இந்த மாசுக்களில் பெரும்பாலானவை தீராத்தொல்லைகள் தரும் நோய்கள் வர காரணமாக அமைகின்றன.

புகைப்பிடிப்பதால் வெளிவரும் வாயு மாசுக்கள் சளிப்படலத்தில் (Mucous membrane) உறுத்தலை ஏற்படுத்துகின்றன. தூசித்துகள்களுக்கு புற்றுநோயை ஏற்படுத்தும் வலிமை உள்ளது. நிகோடின் இதயத்துடிப்பை அதிகரிக்கச் செய்வதால் இதயத்திற்கு வேலைப்பளு ஏற்படுகிறது. இதன் விளைவே 'இரத்தக் கொதிப்பு' ஆகும். இதனால் கோபம், அவசரத்தன்மை, மற்றும் படபடப்பு ஆகியவற்றில் சிக்கித் தவிக்கும் நிலை ஏற்படுகிறது.

புகை பிடிப்போரின் இரத்ததில் கார்பாக்சி ஹீமோகுளோபினின் அளவு ஐந்து முதல் பத்து சதவீதம் இருப்தாக அறியப்பட்டுள்ளது. இரத்தத்தில் இந்த அளவு தொடர்ச்சியாக இருந்தால் மத்திய நரம்பு மண்டலத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. புகைப்பிடிப்பவருக்கு மார்புச்சளிநோய், எம்மைசீயா என்ற நுரையீரல் பாதிப்பு, நுரையீரல் புற்றுநோய் போன்ற தீங்குகள் ஏற்படுவதாகவும் அவர்களின் ஆயுட்காலம் குறைத்து கொண்டே வருவதாகவும் மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சமீபத்தில் வெளிவந்துள்ள உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் மூலம் புகைபிடிப்பதால் உலகில் ஒவ்வொரு மணிக்கும் ஐநூற்று அறுபது நபர்கள் பலியாவது தெரிய வந்துள்ளது. இந்த எண்ணிக்கையை குறைக்கவில்லை அல்லது கட்டுப்படுத்தவில்லை என்றால் இன்னும் இருபது ஆண்டுகளுக்குள் புகைத்தலால் இறப்போரின் எண்ணிக்கை பெருகி ஒவ்வொரு மணிக்கும் இறப்பவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டிவிடும் என உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கிறது. இந்நிலையில், நம் நாட்டின் இளைய தலை முறையினரிடம் இப்பழக்கம் தொற்றுநோய் போல் பரவிக் கொண்டு வருவது மிகவும் கவலையளிக்கக் கூடியதாகும்.

புகைபிடிப்பவர்கள் தங்களுக்கு மட்டுமின்றி, அருகிலுள்ள தம் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் சேர்த்து நோய்களை உருவாக்கு கின்றனர். புகைபிடிப்பவரின் அருகிலுள்ளோர் பலவித நோய்களுக்கு உள்ளாகின்றனர். புகைபிடிப்பவரின் அருகிலிருப்பவருக்கு எரிச்சலுணர்வு, இருமல், சுவாசு முட்டல் (Pulmonary resistance) இரத்தத்தில் கார்போ குளோபினின் அதிகரிப்பு, உடல் இயக்கதிறன் (Psychomotor function) குறைதல் போன்றவை ஏற்படுகின்றன. இவற்றால் குழந்தைகளும், பெண்களும், வயதானவர்களும்தான் பெருமளவில் பாதிப்பிற்குள்ளா கின்றனர். மனையகங்களில் புகைபிடிக்கும் தகப்பன்களால் குழந்தைகளுக்குச் சுவாசச் கோளாறுகள் ஏற்படுவதாக வும், கர்ப்பிணி மனைவிகளின் வயிற்றினுள் வளரும் குழந்தைகளுக்கும் பிற்காலத்தில் ஆஸ்துமா வர வாய்ப்புள்ளதாகவும், புகைபிடிக்கும் கணவன்களால் மனைவிகளுக்கு நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதாகவும் ஜப்பானிய மருத்துவ குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது. மேலும், ஏற்கனவே ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டவர்கள் புகைபிடிப்பவர்கள் மத்தியிலிருந்தால் இந்நோயின் பாதிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் இவ்வறிக்கை தெரிவிக்கிறது. இந்நிலையில், பேருந்து, இரயில், விமான நிலையங்கள், உணவு விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள், திரையரங்குகள் உள்ளிட்ட பொது இடங்களில் புகை பிடிக்கக்கூடாது என்ற தமிழ்நாட்டு அரசின் ஆணை மிகவும் வரவேற்கத்தக்கதாகும். எனினும் சட்டங்களைக் காட்டிலும் புகை பிடித்தலுக்கு எதிராக பொதுக்கருத்து உருவாக வேண்டும் என்றும் இதற்காக அரசு மட்டுமின்றி கல்விக்கூடங்களும், பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் பாடுபட வேண்டுமென உலக சுகாதார நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. புகைபிடிப்பதால் தனக்கும், தன்னைச் சுற்றியுள்ளோருக்கும் ஏற்படும் தீங்குகளை அறிந்துணர்ந்து புகைப்பதைத் தவிர்த்துப் புதுவாழ்வு பெறுவதே புகைப்பவர்கள் தங்களுக்கும், தங்கள் குடும்பத் திற்கும், சமுதாயத்திற்கும் செய்யும் பேருதவியாகும்.

நமக்கு தீங்கு விளைவிக்கக்கூடியவற்றை மனையகங்களில் தவிர்ப்போம். பயன்படுத்துவதை குறைப்போம். அல்லது பயன்படுத்த மறுப்போம். இவையே மனையக மாசுபாட்டின் கொடிய விளைவுகளிலிருந்து நம்மையும் நம் இளைய தலைமுறையினரையும் பாதுகாக்கும்.

**முனைவர் ஆர்.வி. ஜெபா ராஜசேகர்**
இணை ஆராய்ச்சியாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

# பிளாஸ்டிக் கழிவுகளை எரிப்பதால் எழும் பிரச்சினைகள்

ஆதியிலே கடவுள் விண்ணையும், மண்ணையும் படைத்தார். புல், பூண்டு, செடி, கொடி, மரம், ஊர்வன, பறப்பன, நீந்துவன என்று எல்லா உயிர்களையும் நலம்பட படைத்து அவை எல்லாவற்றையும் அனுபவிக்க மனிதனையும் படைத்தார். மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தான்.

நாகரீகம் வளர வளர கண்டுபிடிப்புகள் உயர உயர மனிதன் இயற்கையை மறந்து நல்லதை பகுத்தறிய கொடுத்த ஆறாவது அறிவை தூண்டிவிட்டு புதிய கண்டுபிடிப்புகளால் வளர்ச்சி என்ற நிலையை அடைந்து விட்டான்.

மனிதனின் தன் நலமும் சுய நலமும் பெருத்துவிட்டது. ஒரு இடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்குச் செல்ல அலுங்காமல், குலுங்காமல், அசையாமலும் சென்றடையும் அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. இருந்த இடத்திலிருந்து கொண்டே உலகையே தன் கண்முன் கொண்டு வர வைக்கும் அளவிற்கு அறிவு வளர்ந்துள்ளது. மனிதனின் உபயோகத்திற்கு இயற்கையை விடுத்து செயற்கையில் எண்ணிலடங்கா பொருட்கள். மனித மனம் மாறிவிட்டது.

இயற்கையை பயன்படுத்தி இயற்கையோடு வாழ்ந்த மனிதனிடம் கழிவுகளும் வீணென்று போடப்பட்டவைகளும் அவனை ஒரு பாதிப்புக்கும் உள்ளாக்கவில்லை. ஆனால் செயற்கையோடு வாழும் மனிதன், தான் உற்பத்தி செய்த செயற்கையின் கழிவுகள் இயற்கையையே பாதிக்கின்றது என்றால் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பயன்படுத்துவதற்கு செயற்கையாக உற்பத்தி செய்தவை பயனற்றுப் போனால் அதனை மேலாண்மை செய்ய அவனுக்கு அவனின் ஞானம் போதவில்லை. ஏனென்றால் அவன் விளையாடியது இயற்கையுடன் என்பதும் புரியாமற் போயிற்று.

முன்பெல்லாம் நாம் வீட்டைவிட்டு வெளியே வரும்போது தெருவின் அல்லது ரோட்டின் இருபுறமும் அல்லது வெளியூர் பயணத்தின்போது சாலையின் இரு புறமும் கண்டது என்ன ? மரம், செடி, கொடி, புதர் என்று மண்டிக் கிடக்கும். ஏரி, குளம் என்று நீர் நிலைகள் நிறைந்திருக்கும்.

ஒவ்வொரு வீட்டிலும் கொல்லைபுறம் இருக்கும். அதில் பூச்செடி, பழ மரங்கள் மற்றும் காய்க்கும் செடி, கொடி என்று நிறைந்திருக்கும். ஒவ்வொரு வீடும் குளர்ந்திருக்கும். இறுக்கம் இல்லை.

ஆனால் இன்று நம் ஒவ்வொரு வீட்டிலும், குளிர் சாதனப் பெட்டி, தொலைக்காட்சி, சலவை இயந்திரம், கம்ப்யூட்டர் மற்றும் அலங்கார விளக்குகள், பளிங்கு கற்கள், பூசப்பட்ட சுவர் போன்றவைகள் நிரம்பி இருந்தாலும் பசுமையும், குளுமையும், இனிமையும் தரும் மரம், செடி, கொடிகளில்லை. அவைகள் வளர இடமும் இல்லாமல் இறுக்கமாக உள்ளது. சூரிய ஒளி வீட்டிலும் வர வழியில்லை. பகலிலும் விளக்குகள் எரிகின்றது.

வீட்டை விட்டு வெளியில் வந்தால் தெருவின், ரோட்டின் இருபுறமும் குப்பைக் காடாக நிரம்பியுள்ளது. செல்லும் இடமெல்லாம் திரும்பும் இடமெல்லாம் குப்பைக் கழிவுகள் பிளாஸ்டிக் கழிவுகள், பிளாஸ்டிக் பைகளாக உள்ளது. கடைத்தெருவும், தெருக்கோடியும், பேருந்து நிலையங்களும், பூங்கா மற்றும் பள்ளி, ஹோட்டல் வளாகங்களைச் சுற்றிலும் எல்லாம் குப்பை மயம். முற்காலத்தில் மனிதன் அனுபவித்தது எல்லாம் இன்ப மயம். ஆனால் இன்றைய நவ நாகரீக உலகத்தில் மனிதன் வாழ்வது எல்லாம் குப்பை மயம்.



இந்த குப்பைக்கு காரணமானவர் யார் ? நாம் ஒவ்வொருவருமே. கழிவுகளில் சமையல் கழிவு, பழைய பேப்பர், ரப்பர், உலோகம், பிளாஸ்டிக், பழைய துணி, கட்டை மற்றும் தேவையில்லை என விட்டெரிந்த எல்லாமே கலந்திருக்கின்றது. அவற்றில்

- சில மண்ணோடு மண்ணாக மக்கும் தன்மை உடையது.
- மக்காத தன்மையுடையது.
- சில நச்சுத் தன்மை வாய்ந்தது.
- சில கழிவுகளை மறு சுழற்சி செய்யலாம். மற்றும் சிலவற்றை மறு உபயோகம் செய்யலாம் அல்லது புதைத்துவிடலாம். அப்படி முறையாக செயல்பட்டால் கழிவுகளெல்லாம் கனியைப் போன்று பயன்தரும்.

ஆனால் இன்றைய நிலை என்ன ? எல்லாவிதக் கழிவுகளும் ஒன்றாக கலந்திருப்பதால் அவை மழைபெய்யும் போது நனைந்து துர்நாற்றம் ஏற்படுவதுடன், நிலத்தடி நீரை பாதிக்கிறது, காற்றடிக்கும்போது காய்ந்து மற்ற சுத்தமாக இருக்குமிடத்திற்கு பறந்து சென்று விடுகிறது, இதனால் எல்லா இடமும் குப்பைக் காடாக மாறுகிறது, மேலும் எரிக்கப்படுகின்றது, திடக்கழிவுகளை எரிப்பதால் நீர், நிலம், காற்று விலங்கு, பறவை, மனிதன் மற்றும் இயற்கையே மாசடைந்து, பூமி, மக்கள் வாழ்வதற்கு தகுந்த இடமில்லாமற் போகிறது.

குப்பைகளை எரிக்கும்போது அதனில் இருக்கும் பிளாஸ்டிக் கழிவுகளும் எரியூட்டப்படுவதால், விஷ வாயுக்கள் வெளிவருகின்றது. எரிக்கும் போது வரும் புகையில் நச்சுத் தன்மை வாய்ந்த டையாக்ஸின் என்ற நச்சு காற்றிலும், நிலத்திலும் கலந்து விடுகின்றது.

1940ல் பெட்ரோ கெமிக்கலுடன் குளோரின் கலந்து பொருட்களின் உற்பத்தி ஆரம்பமானது. பிளாஸ்டிக்குகள் கழிவுகளாக எரியப்படும்போது மற்ற திடக் கழிவுகளுடன் கலந்து விடும்போது எண்ணிலடங்காத பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது என்று கண்டறியப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் கலந்த கழிவுகள் எரிக்கப்படும்போது அதிலிருந்து வெளிவரும் டையாக்ஸின் என்ற நச்சு நிலத்திலும் தங்கிவிடுவதால் அந்த நிலங்களில் விளையும் பயிர்களிலும் சேர்ந்து பின் அதனை உண்ணும் விலங்கு மற்றும் மனிதர்களைத் தாக்குகின்றது.

**A** மற்றும் **B** போன்ற கொழுப்பு நிறைந்த வைட்டமின் சத்துள்ள உணவுகளை உண்பவர்களுக்கு எவ்வாறு அவர்கள் உடம்பில் சில பகுதிகளில் கொழுப்பு சென்று தங்கிக் கொள்கிறதோ அதைப்போன்று டையாக்ஸினும் நம் உடம்பில் உள்ள செல்களில் தங்கி விடுகின்றது. இது நீடித்து தங்கியிருக்கும் தன்மையை உடையது. அவ்வாறு தங்கிவிடும் டையாக்ஸின் மெல்ல மெல்ல கிரியை செய்து திசுக்களை அதன் இயல்பாட்டிலிருந்து செயலிழக்கவோ அல்லது வேறுவிதமாக செயல்படவோ தூண்டவும் கூடியது. எனவே, உடல் உறுப்புகள் இயல்பான செயல்பாட்டிலிருந்து விலகி பிரச்சனைகளை உண்டு பண்ணுகிறது. இந்த டையாக்ஸினின் அளவு மனித உடம்பில் அதிகபட்ச அளவு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. முக்கியமாக மீன் மற்றும் மாமிசம் உண்பவர்களுக்கு அதிக வாய்ப்புள்ளது.

மேலும் குப்பைகளை எரிக்கும் பகுதிகளில் வாழும் மக்கள் மிகுதியாக பாதிக்கப்படுகின்றனர். சிறிதளவு Dioxin வெளிப்பாடு இருந்தால்கூட அப்பகுதி மக்களுக்கு சளி மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற தொந்தரவுகளும் அதுவே அதிகமான அளவு பாதிக்கப்பட்டால் உடல் ஊனம் ஏற்படும் அளவிற்கு விஷத்தன்மை வாய்ந்தது இந்த டையாக்ஸின்.

முக்கியமாக டையாக்ஸின் ஆண்களை அதிகமாக பாதிப்புக்குள்ளாக்குகிறது. ஆண்மை இழந்த ஆண்மலட்டுத்தன்மைக்கும் மற்றும் ஆண் குழந்தை பிறப்பு குறைவிற்கும் இது காரணியாக உள்ளது. இதற்கு காரணம் இந்த டையாக்ஸின் தான் என ஆராய்ந்தறியப்பட்டுள்ளது.

இத்துடனில்லாமல் உடல் எலும்பின் தடிமன் குறைதலும், நரம்புத் தளர்ச்சி, தோல் வியாதி, தலைவலி, முகத்தில் பருக்கள் போன்ற நோய்களும், பார்வைக் கோளாறு ஏற்படுத்துவதுடன் எதையும் கிரகிக்கும் சக்தியும் குறைகிறது. டையாக்ஸினில் கார்சினோஜென்ஸ் அதிகமாக இருப்பதால் கேன்சர் என்ற கொடிய வியாதியையும் உண்டாக்குகிறது.



உண்பதிலிருந்து உறங்குவது வரை பிளாஸ்டிக் பயன்பாடு இன்று மனிதனை தொற்றிக்கொண்டதாலும் கழிவுகளை முறையாக கையாளாமல் எரிப்பதால் கேன்சர் வியாதி கைக்குழந்தை முதல் கொள்ளுப்பாட்டி வரை யாரையும் விடாமல் பரவிக் கொண்டிருக்கிறது.

பிளாஸ்டிக் உற்பத்தி 1960 முல் 1995 வரை சுமார் 8000 டன் ஆக இருந்தது. ஆனால் இன்று அதாவது 20000 டன்னுக்கு மேல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் கழிவுகள் முறையாக பிரித்து முறையாக மறுசுழற்சி செய்யாததால் இன்னும் மாசேற்றம் அதிகரிக்க வாய்ப்பாக உள்ளது. மறுசுழற்சி செய்தும் தரமான பிளாஸ்டிக் உற்பத்தி செய்யப்படவில்லை.

1973ல் பிளாஸ்டிக் தொழிற்சாலையில் வேலைசெய்யும் பெண்களின் உடல் நிலையை ஆராய்ச்சி செய்து வெளியிட்ட ஓர் அறிக்கையில் அப்பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள் கீழ்க்கண்டவாறு பாதிக்கப்பட்டதாக கூறுகிறது.

- இறந்து பிறத்தல்
- ஊனமுற்ற குழந்தை
- குறைந்த எடை
- ஒரே பிரசவத்தில் மூன்று, நான்கு என எண்ணிக்கை
- கருவிலேயே குழந்தையை பாதித்து விடுகிறது.
- ஆண் குழந்தைகளை அதிகம் பாதிக்கிறது
- பால்குடிக்கும் குழந்தைகளை மேலும் பாதிக்கிறது

கேன்சர் வருவதற்கு டையாக்ஸினால் ஆறு மடங்கு வாய்ப்பு உள்ளது என சான்றுகளுடன் ஆராய்ச்சிகள் கூறுகிறது. **இவ்வாறு டையாக்ஸின் என்ற நச்சு உண்டாக காரணமான பிளாஸ்டிக், மக்கள் நலனில் ஓர் எதிர்காலப் பிரச்சனையாகவே உள்ளது.**

**இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் ?**

கழிவுகளை மக்கும், மக்காத, மறுசுழற்சிக்குகந்த, மறு பயன்பாட்டிற்கு உகந்த மற்றும் நச்சு கழிவு என கழிவு எங்கு உருவாகிறதோ அங்கேயே வகை பிரித்து விட வேண்டும்.

எக்காரணம் கொண்டும் பிளாஸ்டிக் கழிவுகளை மற்ற கழிவுகளுடன் சேர்த்து கொட்டக்கூடாது. உணவுக் கழிவுகளை வீட்டிலேயே உரமாக்க பல எளிய முறைகள் உள்ளது. அதை கையாள வேண்டும். அதற்கென்று பெரிய நிலப்பரப்போ, பொருளோ, பணமோ தேவையில்லை. சிறிய வாளி அல்லது தகரடப்பா கூட போதுமானது.

இன்றைய நோய் நிறைந்த உலகிற்கு நாம் ஒவ்வொருவருமே காரணம் என வெட்கப்பட்டு நமது கழிவுகளை நாமே கையாளுதல் சிறப்பு.

- பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடாது
- பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துதல் கூடாது
- இயற்கையை நோக்கிச் செல்ல வேண்டும்.
- பேப்பர், தேங்காய் ஓடு, மூங்கில் பாக்குமட்டை, தென்னை ஓலை, பனை ஓலை, சணல் போன்ற இயற்கை மற்றும் மாசேற்றாத பொருட்களை பயன்படுத்துதல் வேண்டும்.
- எக்காரணத்தை முன்னிட்டும் எந்தக் கழிவையும் எரிக்கக்கூடாது
- கழிவுகளை எரிப்பதால் வரும் விளைவுகளை பறைசாற்ற வேண்டும்.
- பிளாஸ்டிக் கழிவு இல்லாத உலகம் படைத்து பின்வரும் சந்ததியினர் நலமுடன் வாழ வழி வகுக்க வேண்டும்.

**கழிவுகள் மக்கும் தன்மை**

| கழிவு | மக்குவதற்கு ஆகும் காலம் |
|---|---|
| வாழைப்பழத்தோல் | 3 முதல் 4 வாரங்கள் |
| காகிதம் | ஒரு மாதம் |
| துணி | 5 மாதங்கள் |
| மரம் | 10 முதல் 15 வருடங்கள் |
| அலுமினியம் | 200 முதல் 500 வருடங்கள் |
| பிளாஸ்டிக் | ஒரு மில்லியன் வருடங்கள் |
| தெர்மாகோல் | முடிவே இல்லை |

இந்தியாவில் 1 நபர் 1 நாளுக்கு 1/2 Kg கழிவு உற்பத்தி செய்கிறார்கள். ஜனத்தொகையின் பெருக்கத்தால் கழிவுகளின் அளவு அதிகமாகி விட்டது. மனிதன் கழிவினை முறையாக மேலாண்மை செய்ய தொழில்நுட்பத்துடன் செயல்படுத்த வேண்டும். ஆனால் எங்கெங்கு காணினும் குப்பையடா என்ற நிலையிலிருந்து சற்று விடுபட மனிதன் குறுகிய நேரத்தில் குப்பையிலிருந்து விடுபட சுலபமான வழியாகிய எரியூட்டுதலையே முதன்மையாகக் கொண்டு செயல்பட ஆரம்பித்தான். ஏனெனில் குப்பையும் குறைந்து விடும், இடமும் சுத்தமாகி விடும் என்று கருதியதால் எங்கெங்கும் கண்ட குப்பைக் கழிவுகளை அங்கங்கு கொளுத்தி விடுகிறான். ஆனால் தான் எரித்த குப்பைகளில் குளோரின் கலந்த பொருட்களும் இருந்தால் அவைகளை எரிக்கும்போது வெளிவரும் நச்சுத்தன்மை வாய்ந்த டையாக்ஸின் இருப்பது அவனறிவிற்கு எட்டவில்லை. டையாக்ஸின் என்பது தொழிற்சாலைகளில் உற்பத்தி முறையின்போது உருவாகும் துணைப் பொருள் ஆகும். ஏஜன்ட் ஆரஞ்சில் (Agent Orange) காணப்பட்ட 2, 4, 5 - T மற்றும் 2, 4 - D என்ற இரு ஹெர்பிசைட்ஸ் உற்பத்தியின்போது இது வெளிப்படுகின்றது மட்டுமல்லாமல் உற்பத்தியின்போது இரசாயன முறைகளில் அதாவது காகிதம் மற்றும் காகிதக் கூழின் குளோரினேட்டட் பிளீச்சிங்கின் போதும் வெளிப்படுகிற டையாக்ஸின் என்பது டெட்ராகுளோரோ–டைபென்சோ – பி – டையாக்ஸின் (Tetrachlorodibenzo-p-Dioxin (TCDD) கூட்டு சேர்க்கையாகும். 75 வகையான டையாக்ஸின்கள் உள்ளன. TCDD பற்றிய ஆராய்ச்சி 1940 லிருந்தே உள்ளது. சமீபத்தில் கண்டறியப்பட்ட ஆராய்ச்சியின்படி நச்சுத் தன்மை வாய்ந்த டையாக்ஸின் ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்தப்படும் குரங்கு, எலி மற்றும் முயல் போன்றவைகளின் உடலில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கார்பனுடன் பிணைக்கப்படுகின்ற குளோரின் வகை இரசாயனங்களின் வகுப்பாகிய ஆர்கனாகுளோரின் (Organochlorines) குடும்பத்தை சார்ந்ததுதான் டையாக்ஸின். இவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் பாலிவினைல் குளோரைடு (PVC), சால்வன்ட்ஸ், குளிர்சாதனக் காரணிகள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் இவைகளின் பயன்பாட்டினால் டையாக்ஸின் நச்சு வேகமாக பரவுகின்றது. டையாக்ஸின் காற்று வழியில் கலந்துவிடுவதால் நுகரப்படுகின்றது. டையாக்ஸின் என்னும் நச்சு நமது தோல் வழியாகவும் உடலில் ஊடுறுவக் கூடியது.

தாய்ப்பாலில் கூட இதன் நச்சுத் தன்மை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சுவாசக் குழாய்களின் வழியாக டையாக்ஸின் உட்செல்லும் போது தலைசுற்றல், வாந்தி, வயிற்றுப்போக்கு, தலைவலி, தோல் எரிச்சல், இதயத்துடிப்பு வேகமாவது போன்ற பல பிரச்சனைகள் ஏற்படுகின்றது.

டையாக்ஸின் விளைவை உணர்ந்து புற்றுநோய்க்கு நம்மை விலை பேசி விடாமல் பிளாஸ்டிக் இல்லா வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவோம். ஏனெனில் பிளாஸ்டிக் பயன்படுத்துவதால் தானே பிளாஸ்டிக் கழிவுகள் உண்டாகின்றன. எனவே

**Better please SAY டாட்டா TO PLASTIC**

J. திரேசா
நூலகர்
த.நா.மா.க.வாரியம்
சென்னை

**பணி ஓய்வு**

திரு N. சுடலைமுத்து,

ஜுலை 9 . 1989 ஆம் ஆண்டு வாரிய பணியில் அமர்த்தப்பட்ட திரு N.சுடலைமுத்து அவர்கள் ஜுன் 30, 2009 அன்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார். அவருக்கு பணி பாராட் டு சான்றிதழ் வழங்கப்பட்டது

# பொறுமையே பெருமை (கற்பனை கதை)

சென்ற இதழின் தொடர்ச்சி...

இவ்வளவு சுடு வார்த்தைகளைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த பூமிகா, அமைதியாக, சூர்யா இப்பொழுது மட்டும் நீ என்னை சுட்டெரிக்காமலா இருக்கிறாய் ? தினம்–தினம் என்னை சுட்டெரித்துக் கொண்டுதான் இருக்கிறாய் உன் கொடூர வெப்பத்தை தினம்–தினம் தாங்கும் என்னைப் பார்த்தா உணர்வு அற்றவள் என்று கூறுகிறாய் என்று கண்ணீர் மல்க கூற, சற்று கோபம் தணிந்த சூர்யா, பூமிகா, நான் உன்னை சுட வேண்டும் என்று சுடவில்லை. உன்னில் வாழும் மனித மூடர்களை நசுக்கி சுட்டெரிக்க நினைத்துதான் அப்படி செய்கிறேன். இந்த மனிதர்கள் நாளுக்குநாள் உன்னை எவ்வளவு கொடுமைப்படுத்து கிறார்கள் ? உன் வயிற்றை குடைந்து (பெரிய–பெரிய கட்டிங்களையும்) இராட்ச பம்புகளைப் போடுவது ஒரு புறம் இருக்க, உன்மேலே ஆங்காங்கே பெரிய–பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அதில் வரும் ஏராளமான இரசாயனக் கழிவுகளை உன் வாயில் கொட்டி, நிலத்தடி நீரையும், கடல், ஏரி, ஆறு, குளம்–குட்டை அனைத்தையும் மாசுபடுத்தி வருகிறார்கள் பாழாய்ப் போன மனிதர்கள் கண்ட கண்ட இடங்களில் குப்பைகளை போடுவதும், பண்டிகை என்ற பெயரில் தேவையில்லாத பொருட்களை எரித்து கரும்புகை ஏற்படுத்தி, நம் தோழன் வாயுவையும் தொந்தரவு கொடுத்து வருகிறார்கள்.

இதனால் விண்ணுலகில் நாங்களும் சுகாதாரமான காற்றை சுவாசிக்க முடியவில்லை. அந்தக் கோபத்தில்தான் நான் மனிதனை துன்பப்படுத்தும் விதத்தில் அவர்கள் மீது என் வெப்பத்தை பாய்ச்சுகிறேன். மனிதர்களின் தன்நல செயல்பாட்டினால் உருவாகும் சுத்திகரிக்கப்படாத நச்சுக் காற்று உன் வளமையையும் வருத்தி, உன்னையும் என்னையும் நட்பால் இணைக்கும் ஓசோன் மண்டலத்தையும் ஓட்டை விழ செய்து விட்டனர். உன்மேல் விழும் புறஊதாக்கதிரை நானே கட்டுபடுத்த நினைத்தாலும் கட்டுப்படுத்தமுடியாது. என் சிறந்த தோழி மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்கும் தாயைப் போன்றவள். தாய் தெய்வத்திற்கு சமமானவள். நீ மனிதர்களுக்கு மட்டுமல்ல, கோள்களுக்கும், விண்மீன்களுக்கும், துணைக் கோள்களுக்கும் ஏன் இந்த உலகத்திற்கே ஒரு சிறந்த தாய், தோழி, சகோதரி போன்றவள் அதனால்தான் விண்வெளியில் உள்ள நாங்கள் உன்னை பாதுகாப்பதுடன், வணங்கியும் வருகிறோம். இந்த பாழாய்ப் போன மனிதனுக்குத் தெரிய வில்லையே உன் அருமை.

அனைத்தையும் மிகவும் அமைதியாகவும் பணிவுடனும் கேட்டுக் கொண்டிருந்த பூமிகா பின் சூர்யா என் மேல் இவ்வளவு அளவுகடந்த பாசமும் நேசமும் கொண்டுள்ள உங்கள் அனைவருக்கும் நான் என்ன கைமாறு செய்வேன் என்றே தெரியவில்லை. உங்கள் அனைவருக்கும் என் கண்ணீரை அன்பு காணிக்கையாக்குகிறேன். என்னுள் இவ்வளவு கஷ்டங்களை நான் கொண்டிருப்பது உங்கள் யாவருக்கும் தெரியும். இருந்தாலும், நீயோ சாதாரண விஷயத்திற்காக, நண்பர்களின் சந்தோஷ கேளிகைக்கு கோபப்பட்டு உன் கொடுமையான வெப்பத்தால் தீய செயலை செய்ய நினைத்தாய். இந்த எண்ணத்தை இன்றோடு விட்டுவிடு. எப்பொழுது நீங்கள் அனைவரும் என்னை தாயாக, தோழியாக, சகோதரியாக நினைத்தீர்களோ அப்பொழுதிலிருந்தே நீங்களும் என் குழந்தைகள் தான். என்னுள் இருக்கும் மதிகெட்ட மானிடர்கள் செய்யும் செயலாலே நான் மிகவும் துன்பத்திற்கு ஆளாகி வருகிறேன். நான் அதை மறுக்கவோ, மறைக்கவோ விரும்பவில்லை. ஆனால், இப்பொழுதெல்லாம் என்னைக் காக்க பள்ளி, கல்லூரி குழந்தைகள், நன்கு படித்த அறிஞர் பெருமக்கள் அனைவரும் முனைப்புடன் செயலாற்றி வருகிறார்கள். ஆகவே என்னைப் பற்றிய கவலையை தயவு செய்து விட்டுவிட்டு, விண்ணுலகில் வாழும் நீங்கள் அனைவரும் மற்றவர்களுக்கு கெடுதல் நினைக்காமல் அன்பாக பழகுங்கள். உன் கோபக் கணையை மக்கள் மீது இனி வீசாதே. நீ உண்மையிலேயே என்னை உன் சிறந்த தோழியாக நினைத்தால், உன் வெப்பத்தை சற்று தணித்து, மனிதனை துன்பத்திற்கு ஆளாக்காமல் பார்த்துக் கொள் இன்று நான் என் பொறுமையினால்தான் பெருமை தாங்கி நிற்கிறேன். உலக நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து என்னை காப்பதில் முயலுகின்றனர்.

எனக்கு வெடிக்கவும் தெரியும், பிளக்கவும் தெரியும், இவ்வுலகையே அழிக்கவும் தெரியும். நான் ஒருபொழுதும் அவ்வாறு செய்ய மாட்டேன் ஒரு தாய் தன் குழந்தையை அழிப்பாளா ? குழந்தை எப்படிப்பட்ட தவறு செய்தாலும் பொறுமையோடு அல்லவா காப்பாள். ஆகவே, நீயும் என்னைப் போன்று "பொறுமையே பெருமை" என்ற நினைப்போடு வாழ்ந்தால், நாமும் நம்மைச் சுற்றியுள்ள மனிதன் உட்பட அனைத்து ஜீவராசிகளும் நலம் பெற்று வாழலாமே. அன்பு ஒன்று தான் உலகில் தலைசிறந்த மருந்து. அன்பினால் அனைவரையும் எளிதில் கவர முடியும். அன்பினால் மட்டுமே அனைவரின் மனதிலும் இடம் பிடிக்க முடியும். அன்பு ஒன்றினால் மட்டுமே திருந்தாத நெஞ்சத்தையும் திருத்தலாம் அல்லவா ? தன் நலம் அங்கே இருக்காது. இதனால் என்றும் அனைவரும் நலம் பெற்று வாழலாம் இல்லையா ? என்று பூமி தன் பொறுமைக்கே பெருமை சேர்க்கும் விதத்தில் தன் கருத்தை அன்புடன் சூர்யாவிற்கு எடுத்துக் கூறினாள். சூரியா தான் செய்த தவறை எண்ணி மிகவும் வருந்தி, பூமிகா என்னை மன்னித்துவிடு. இனி நான் ஒருபோதும் இதுபோன்ற கெட்ட புத்தியோடு அலையமாட்டேன் என் கோபத்தை அடக்கி, உன்னைப் போன்று நற்பெயர் எடுப்பேன். நான் உன்னிடம் இவ்வளவு நேரம் சுயநலத்தோடு பேசியதை தயவு செய்து நீ யாரிடமும் கூறாமல் இருப்பாய் என்ற நம்பிக்கையில் உன்னிடம் விடைபெற்று, மக்களையும், நம் உறவினர்களையும் மிதமான வெப்பத்துடனும், அதிக வெளிச்சத்துடனும் காக்க புறப்படுகிறேன்.

**ஜி. ஜனதா.**
பொது உதவியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## சுற்றுச்சூழல் தினங்கள்

பிப்ரவரி

| | |
|---|---|
| 2 | உலக சதுப்பு நில தினம் |
| 28 | உலக அறிவியல் தினம் |

மார்ச்

| | |
|---|---|
| 21 | உலக வன நாள் |
| 22 | உலக தண்ணீர் தினம் |
| 23 | உலக வானிலை தினம் |

ஏப்ரல்

| | |
|---|---|
| 7 | உலக சுகாதார தினம் |
| 18 | உலக பாரம்பரிய தினம் |
| 22 | பூமி தினம் |
| 24 | ஒலி மாசு தடுப்பு தினம் |

மே

| | |
|---|---|
| 23 | International Day of action on POPs (Persistant Organic Pollutants) |
| 31 | ஊதாமல் ஒரு நாளும் (No Smoking Day) |

ஜுன்

| | |
|---|---|
| 4 | Green Leaf Day |
| 5 | உலக சுற்றுச்சூழல் தினம் |
| 17 | Global Day of Action against Waste Incineration |
| 20 | போதைபொருள் எதிர்ப்பு தினம் |

## சுற்றுச்சூழலை காக்க

நாட்டின் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் இளைஞர்கள் ஆர்வம் காட்ட வேண்டும். நாடு முழுவதும் 30 கோடி இளைஞர்கள் உள்ளனர். ஒவ்வொருவரும் குறைந்தது 5 மரக்கன்றுகள் நட



உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி செய்தால் நாடு முழுவதும் 150 கோடி மரத்தை வளர்க்க முடியும்.

**அப்துல் கலாம்**
(முன்னாள் குடியரசு தலைவர்)

## தோற்ற மயக்கம்

அந்த காலம்
சூரியனை எழுப்பும் சேவல் குரல்

இந்த காலம்
ஏறுவரிசையில் அலறும் கைப்பேசி ஒலி

அந்த காலம்
அருவிநீர் மூலிகை வாசம்

இந்தகாலம்
குளியலறை தொட்டி வாசனை திரவியம்

அந்தகாலம்
கூடவே நிலா வர பொடி நடை

இந்த காலம்
கூப்பிடும் தூரம் சென்று வர வாகனப்படை

அந்தகாலம்
தாகத்திற்கு தண்ணீர்

இந்த காலம்
தண்ணீருக்கே தாகம்

அந்த காலம்
தண்ணீர் எண்ணெயோ ?
தாமரை விளக்கோ ?
தடாகங்கள் பார்க்கையில் தன்னிலை மயங்கும்

இந்தகாலம்
எலக்ட்ரிக் வயர் குத்துவிளக்கு
அதில் எரியும் மின்சார பல்பு

அந்த காலம்
வேப்பமரமிருக்கும் நெடுஞ்சாலைகள்

இந்த காலம்
பாய் நிழல் விரிக்கும் மேம்பாலங்கள்

அந்த காலம்
பறவைகள் பறந்த வானம்
இந்த காலம்
விமானங்கள் நொறுங்கும் வானம்

அந்த காலம்
பசும்புல் மேய்ந்து பசும்பால் கறக்கும் ஆவினம்

இந்த காலம்
காகிதம் மேயும் கறவைகள்

அந்த காலம்
காலநிலை நிர்ணயித்த கைத்தொழில்

இந்த காலம்
தொழிற்புரட்சி நிர்ணயித்த பருவ மாற்றம்

அந்த காலம்
ஐந்திணைகள் பருவ மழை

இந்த காலம்
காடழித்த நாடு செயற்கை மழை

அந்தகாலம்
பூப்பூக்கும் ஓசை கேட்கும் செவிகள்

இந்த காலம்
...................... ?

அந்தகாலம்
"ஒரு குடம் தண்ணி ஊத்தி
ஒரே பூ பூத்தது"
கூடி விளையாடும் குழந்தைகள்

இந்த காலம்
கணினியில் பேசும் விலங்குகளோடு
பேசாமல் குழந்தைகள்

அந்த காலம்
உயிர்கள் வாழ
அந்த காலம்
அது உதய காலம்

இந்த காலம்
சந்தியா காலம்
உயிர்களை குடிக்கும் இந்தகாலம்

அந்த காலம்
நெற்றி வியர்வை நிலத்தில் விழ
பாடுபட்ட மனிதன்

இந்த காலம்
ரோபோவாகிப்பான மனிதன்
தானியங்கி யாகிப்போன ரோபோக்கள்

இந்த காலம்
முன்னேற்றம் தான்
எதை நோக்கி ?

**மு. மைதிலி**
சுற்றுச்சூழல் விஞ்ஞானி
த.நாமாகவாரியம்



**35வது இந்திய சுற்றுலா - அண்ணா நூற்றாண்டு தொழில் பொருட்காட்சி - 2009ல்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அரங்கம்**







## உலக சுற்றுச்சூழல் தினம் 2009

சுற்றுச்சூழல் துறை இயக்குனரகம் சார்பில் நடத்தப்பட்ட உலக சுற்றுச்சூழல் தின விழாவில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் உலக சுற்றுச்சூழல் தினத்தை 5.6.09 அன்று காஞ்சிபுரத்தில் எஸ்.எஸ்.கே.வி. மேல்நிலைப்பள்ளியில் கொண்டாடியது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர் அவர்கள் தலைமை ஏற்று நடத்தி வைத்தார்கள். வாரியத்தின் நடமாடும் சுற்றுச்சூழல் கண்காட்சி வாகனத்தில் உள்ள சுற்றுச்சூழல் அடங்கிய பல்வேறு விளக்கப்படங்களை மாணவிகள் அமைச்சர் அவர்களுக்கு விளக்கமாக எடுத்து கூறினர். மேலும் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. பல்வேறு பள்ளியை சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு அடங்கிய துண்டு பிரச்சாரங்கள் தரப்பட்டன. வாரியத்தின் சார்பில் கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதன் தொடர் நிகழ்வாக நடமாடும் சுற்றுச்சூழல் கண்காட்சி வாகனம் ஜூன் 19ம் தேதி வரை காஞ்சிபுரத்தில் இயங்கியது.







